www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 1.30 **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையை கண்டுபிடி : 5x1=5

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. தான்சானியா ________ கண்டத்தில் உள்ளது.
   அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா
3. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்
   அ) செவ்வாய் ஆ) சந்திரன் இ) புதன் ஈ) வெள்ளி
4. அதிகமான கப்பல் போக்குவரத்து நடைபெறும் பெருங்கடல்
   அ) பசிபிக் பெருங்கடல் ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்
   இ) இந்தியப் பெருங்கடல் ஈ) ஆர்டிக் பெருங்கடல்
5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை ________.
   அ) 25 ஆ) 23 இ) 22 ஈ) 26

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 5x1=5

1. பிஹு திருவிழா ________ மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.
2. பெருங்கடல்களில் மிகப்பெரியது ________.
3. கோள் என்ற வார்த்தையின் பொருள் ________.
4. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு ________.
5. ________ மிகப் பழமையான நாகரீகம்.

III. பொருத்துக : 5x1=5

1. பாறை ஓவியங்கள் - பசிபிக் பெருங்கடல்
2. மொகஞ்சதாரோ - சனி
3. வளையம் உள்ள கோள் - மீன்பிடித்தல்
4. மரியானா அகழி - இறந்தோர் மேடு
5. கடற்கரை பகுதிகள் - வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது

IV. சரியா? தவறா? 3x1=3

1. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது.
2. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.
3. முதல் எழுத்து வடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது.

V. பொருந்தாததை வட்டமிடுக : 3x1=3

1. வெள்ளி, வியாழன், நெப்டியூன், சனி
2. புளூட்டோ, ஏரிஸ், செரஸ், அயோ
3. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, இலங்கை

Padasalai.Net

Scanned with CamScanner

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



VI. சுருக்கமான விடையளி: (எவையேனும் 7) 7 x 2 = 14

1. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.
2. பரிணாமம் என்றால் என்ன?
3. சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம். காரணம் கூறு.
4. உட்புறக் கோள்களைப் பெயரிடுக.
5. கண்டம் என்றால் என்ன?
6. பன்முகத்தன்மையினை வரையறு.
7. இந்தியாவில் புகழ்பெற்ற செவ்வியல் நடனங்களை பட்டியலிடுக.
8. வேறுபாடறிக - மலை, பீடபூமி
9. வேறுபாடறிக - பெருங்கடல், கடல்
10. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றைப் பற்றி எழுதுக.

VII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி. (எவையேனும் 2) 2 x 5 = 10

1. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.
2. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் - வேறுபடுத்துக.
3. பசிபிக் பெருங்கடலின் சிறப்பம்சங்களை விளக்குக.
4. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?

VIII. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும். 5 x 1 = 5

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. இந்தியப் பெருங்கடல்
4. பசிபிக் பெருங்கடல்
5. ஆஸ்திரேலியா

******

Padasalai.Net

Scanned with CamScanner

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com